Import of power generators

*** 285 Q.—Thiru K. SUPPU : Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken by the Government to expedite action to import power generators, oil engines, etc., to meet the immediate requirements of Tamil Nadu ?**

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது விஷயமாக மத்திய அரசை அணுகி தமிழ்நாட்டிலிருந்து அனுப்பப்படும் விண்ணப்பங்களின் மேல் இந்திய அரசு ஒரு நல்ல முடிவை எடுக்குமாறும், போதுமான எண்ணிக்கையில் ஜெனரேட்டர்களையும், உதிரி உறுப்புகளையும் இறக்குமதி செய்வதற்கு அனுமதி அளிக்குமாறும், வரிகளையும் நீக்குமாறும் அவர்களை கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

ஜெனரேட்டர்களை இறக்குமதி செய்வதற்காகத் தனியார் தொழில் முனைவர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களையும் ஆதரவான கவனிப்புக்காக மத்திய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

திரு. ஆ. பரந்தாமன் : மின்சாரப் பற்றுக்குறை ஏற்பட்டிருக்கும் இந்த நேரத்தில் நமது மின்சார வாரியத்தின் மூலமாக சில இயந்திரங்கள் தேவைப்படுவதை வாங்க ஃபாரின் எக்ஸ்சேஞ்சு ரிலீஸ் செய்து தர வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தைப் பல ஆண்டுகளாக வற்புறுத்தியும் இன்னும் மத்திய அரசு செய்யவில்லை. அதற்கான காரணங்கள் என்னவென்று தெரியவில்லை. ஆகவே, நமது அரசு மத்திய அரசை வற்புறுத்தி அந்த இயந்திரங்களை வரவழைக்க அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தர உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் மின்சாரப் பற்றுக்குறையைத் தீர்க்க இது போன்ற ஜெனரேட்டர்களுக்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்தோம். இப்போது ஜெனரேட்டர்களுக்குப் பயன்படுத்தக் கூடிய ஆயிலுக்குப் பஞ்சம் வந்திருக்கிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : கடந்த ஆண்டு 75 சத விகித மின்வெட்டு ஏற்பட்டபோது வியாபாரிகள் தாங்கள் சுயமாகவே ஒன்று, இரண்டு குதிரை சக்தியுள்ள இந்த இயந்திரங்களை வாங்க முற்பட்ட போது இரண்டாயிரம் ரூபாய் விலையுள்ளதை நாலாயிரம் ரூபாய் கொடுத்தும், மூவாயிரம் என்று சொல்லும்போது ஆறுயிரம் ரூபாய் கொடுத்தும் வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. பத்தாயிரம் ரூபாய் விலை கொடுத்து வாங்கிய நிலை கூட இருக்கிறது. இன்னும் மின்வெட்டு ஏற்படலாம் என்ற அச்சம் இருப்பதால், முன்கூட்டியே போதுமான அளவுக்கு இந்த இயந்திரங்களை இறக்குமதி செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு செ. மாதவன்: அதைத்தான் சொன்னேன். ஜெனரேட்டர்களுக்கு வேண்டிய ஆயிலுக்கு இப்போது பஞ்சம் ஏற்பட்டு விட்டது.

திருமதி த. ந. அனந்தநாயகி: இதுவரை போட்ட விண்ணப்பங்களின் பேரில் எவ்வளவு ஜெனரேட்டர்கள் இம்போர்ட் ஆகியிருக்கின்றன?

மாண்புமிகு திரு செ. மாதவன்: 81-க்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள்.

Institute for Physically Handicapped.

***Q. 286—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state :**

(*a*) whether there are proposals under the consideration of the Government to set up any Institute to assist the Physically Handicapped in this State ; and

(*b*) if so, the details thereof.

மாண்புமிகு திரு. செ. மாதவன்:

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ்: பொருளாதார நிலையில் பின்தங்கிய உடல் ஊனம் உற்றவர்களுக்கு உதவி செய்யும் வகையில் இவ்வித இன்ஸ்டிடியூட்டை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதற்கு இன்ஸ்டிடியூட் தேவையில்லை. அவர்களுக்குத் தொழில் வாய்ப்புக் கொடுக்கிற தொழில்களைத் தொடங்கலாமா என்பதைப் பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி: உடல் ஊனமுற்றவர்களுக்கு முதியோர் பென்ஷன் கூடக் கொடுக்க முடியாமல் இருக்கிறது. அவர்களுக்கு உதவி செய்வதற்காக சமீபத்தில் முகவை மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்தபடி ஏதாவது திட்டம் இருக்கிறதா? அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு செ. மாதவன்: உடல் ஊனமுற்றவர்களுக்குத் தனியார் துறையில் கொஞ்சம் வேலை கொடுக்கிறார்கள். அவர்களை கட்டாயப்படுத்த அதிகாரமில்லை. அரசாங்கமே சிறு சிறு தொழிற்சாலைகளை ஆரம்பித்து இவர்களுக்கு வேலை கொடுக்கலாமா என்ற முறையில் முயற்சி எடுத்து வருகிறது.